IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

OS.No.80/2017
Deposition of witness for PW9

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : முனியன் | Caste | : | |
| Father Name | : கோவிந்தசாமி | Calling | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of November, 2025.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

1. நான் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலததில் உள்ள விவரங்கள் எனக்கு நன்றாக தெரியும். என் தரப்பில் உள்ள அனைவருக்கும் சேர்த்து தான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்தேன். மற்றவர்களுக்காக நான் பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன் என்ற வரி பிரமாண வாக்குமூலத்தில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 1 ஆம் பிரதிவாதியான ஜான் தாவா சொத்தை யாரிடமிருந்து வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது என்று சாட்சி கூறிவிட்டு பின்பு மகாதேவன் என்பவரிடமிருந்து வாங்கினார் என்று கூறினார்.

2. தாவா சொத்தை ஜான் என்பவர் 27.07.1978 ல் ரூபாய் 8,015/–க்கு மகாதேவ நாயுடு என்பவரிடமிருந்து வாங்கினார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்ணானது 291 மற்றும் 262 ஆகும். அதன் விஸ்திரனம் சர்வே எண். 291 ல் 1 ஏக்கர் 47 சென்ட் ஆகும். சர்வே எண். 262 1 ஏக்கர் 24 சென்ட் ஆகும். ஜான் என்பவரிடம் நான் நேரடியாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தினேனா என்றால் இல்லை. ரகமத்துல்லா சாய்ப் என்பவரிடம் ஒப்பந்தம் போட்டார். நான் அந்த ஒப்பந்தத்தை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன். தேதி நியாபகம் இல்லை. சாய்ப் என்பது பாய் என்பதாகும். 18.11.1985 ல் ஜான், ரகமத்துல்லாவிடம் பதிவு

செய்யப்பட்ட ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். ரூபாய் 18,000/- க்கு ஒப்பந்தம் போட்டிருந்தார். முன் பணமாக 7,000/- கொடுத்தார். ஒப்பந்தமானது 19,000/-ற்கு தான் போடப்பட்டது 18,000/-ற்கு போடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

3. வா.சா.ஆ.1 ல் 2 வது பக்கத்தில் ஒப்பந்தத்தின் படி ரகமத்துல்லா 6 மாதத்திற்குள் அதாவது 18.11.1985 தேதி முதல் 17.05.1986 தேதிக்குள் மீதி கிரைய தொகையான ரூபாய் 12,000/-ஐ பெற்றுக் கொண்டு 1 ஆம் பிரதிவாதி கிரையம் கொடுக்க வேண்டும் என்ற வாசகம் உள்ளது என்றால் வாசகம் உள்ளது. ஆனால் ரகமத்துல்லா கால அவகாசத்திற்கு உண்டான அளவை ரூபாய் 2,000/- கொடுத்து கால நீட்டிப்பு செய்துள்ளார். தேதி எனக்கு நியாபகம் இல்லை. மேற்படி 2,000/- கொடுத்தற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

INBARANI Digitally signed by INBARANI

DISTRICT MUNSIF
KATPADI